## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு – 2010

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் புத்தகங்களை பராமரித்து வந்திருந்தது என்றும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத் தவிர 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிலைவரம், அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு, காசோட்டம் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பல்கலைக்கழக அனுமதிக் கையேட்டின் விற்பனைகளிலிருந்து மீளாய்வாண்டின் போது கிடைத்த மொத்த வருமானம் ரூபா 25,334,655 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய குத்தகைத் தவணைப் பணம் ரூபா 9,970,642 தொகையினை அக்கணக்கிற்குச் சீராக்கியதன் காரணமாக ஆண்டிற்கான வருமானம் ரூபா 15,364,013 ஆக வருமான செலவுக் கணக்கில் காட்டப்பட்டிருந்ததனால் வருமானம் ரூபா 9,970,642 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) சப்ரகமுவ மற்றும் ஊவா வெலஸ்ஸ பல்கலைக்கழகங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அதிகளவான அலுவலக உபகரணங்களும் கணனியும் தொடர்பான நிலையான சொத்துக்களுக்கு உரிய செம்மையாக்கல்கள் மேற்கொள்ப்பட்டு கணக்கிற்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும தீர்த்துவைக்கப்படாத் மீதிகள் அவதானிக்கப்பட்டன.

| | விபரம் | காலம் | பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|
| (i) | **ஏனைய முற்பணங்கள்** | | |
| | மூலதனச் செலவுகள் | 1976 இலிருந்து இன்று வரை | 40,000 |
| (ii) | **விசேட நிதிகள்** | | |
| | தேசிய விஞ்ஞான ஆராய்ச்சி நிறுவனம் | 2008 இலிருந்து இன்று வரை | 254,490 |
| (iii) | **வியாபார மற்றும், ஏனைய செலுத்த வேண்டியவைகள்** | | |
| | செலுத்தவேண்டிய புலமைப்பரிசில்கள் | 2003 இலிருந்து இன்று வரை | 9,932 |

### 1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| (அ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 89 ஆம் பிரிவு, 1958 இன் 15 ஆம் இலக்க சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் 47 ஆம் பிரிவு மற்றும் 1988 இன் 47 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிய திருத்திய அதிகாரச்சட்டத்தின் 16(2) ஆம் பிரிவு | 2004 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரை பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களினால் செலுத்தப்பட்ட ரூபா 2,783.70 மில்லியன் தொகையான கல்விசார் படிகளில் மொத்தமாக சேமலாப நிதியத்திற்கும் ஓய்வூதிய நிதியத்திற்கும் ரூபா 417.55 மில்லியனும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு ரூபா 83.51 மில்லியனும் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் அப்பணத்தினை அறவீடு செய்வதற்கோ அல்லது எதிரீடு செய்வதற்கோ இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. |
| (ஆ) பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் 1988 மார்ச் 06 ஆந் திகதிய பீஈ/1/174/11(பீ) ஆம் இலக்க மற்றும் 2002 ஒக்டோபர் 25 ஆந் திகதிய பீடீ/பீஈ1/174/11 ஆம் இலக்க சுற்றுநிருப கடிதங்கள் | இச்சுற்றுநிருபங்களுக்கு முரணாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, பல்கலைக்கழகங்கள், உயர் கல்வி நிறுவனங்கள் என்பவற்றின் உத்தியோகத்தர்களுக்கு 2004 ஆம் ஆண்டிலிருந்து 2010 திசெம்பர் 31 வரை ரூபா 98.598 மில்லியன் தொகை மொழித்திறன் படியாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (இ) | 2006 யூன் 06 ஆந் திகதிய 876 ஆம் இலக்க ஆணைக்குழு சுற்றுநிருபம் | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு முரணாக சுற்றுநிருபத்தின் மூலம் கணனி தரவு செயற்பாட்டு உதவியாளர் ஒருவர், 03 வேலையாட்கள், ஒரு சாரதி ஆகியோர் 2010 ஆம் ஆண்டின் போது சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர். |
| (ஈ) | 1997 சனவரி 24 ஆந் திகதிய 116 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றுநிருபம் | 116 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றுநிருபத்திற்கு முரணாக பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவினால் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட மூன்று உத்தியோகத்தரும் உயர்கல்வி அமைச்சில் சேவைக்கு விடுவிக்கப்பட்டு 2010 ஆம் ஆண்டிற்காக ரூபா 382,360 தொகை சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி மீளாய்வு

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் செயற்பாட்டு விளைவுகள் மீண்டுவரும் செலவுகளுக்கான அரசாங்க மானியத்தினை கணக்கிலெடுத்துக் கொள்வதற்கு முன்னர் ரூபா 570,337,259 பற்றாக்குறையாக இருந்துடன் முன்னைய ஆண்டிற்கான இதனோடொத்த பற்றாக்குறை ரூபா 527,176,642 ஆக இருந்தது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக மீண்டுவரும் செலவுகளுக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட முறையே ரூபா 570,337,259 மற்றும் ரூபா 527,176,642

தொகையான அரசாங்க மானியத்தினைக் கணக்கிலெடுத்துக் கொண்டதன் பின்னர் அந்த 02 ஆண்டுகளில் பற்றாக்குறையோ மிகையோ ஏற்பட்டிருக்கவில்லை.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2007/2008 , 2008/2009 மற்றும் 2009/2010 ஆம் கல்வி ஆண்டுகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பல்கலைக்கழகத்திற்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் மீண்டுவரும் செலவுகளின் பொழிப்பு ஒன்று கீழே தரப்படுகின்றது.

| | | **2007/2008** | **2008/2009** | **2009/2010** |
|---|---|---|---|---|
| (i) | பல்கலைக்கழகத்திற்குத் தகைமை பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை | 121,421 | 130,236 | 125,284 |
| | பல்கலைக்கழகங்களில் சேர்த்துக் கொள்வதற்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | 20,069 | 20,846 | 21,547 |
| | பல்கலைக்கழகத்திற்காக தகைமை பெற்ற மாணவர்களின் சதவீதமாக பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் | 17% | 16% | 17% |
| | | 2008 | 2009 | 2010 |
| (ii) | மேற்கொள்ளப்பட்ட மீண்டுவரும் செலவு (ரூபா ‘000) | 9,921,345 | 10,227,920 | 10,865,900 |
| | மொத்த மாணவர் எண்ணிக்கை | 69,491 | 71,471 | 73,398 |
| | ஒரு மாணவர்களுக்கான சராசரி மீண்டுவரும் செலவு (ரூபா) | 142,771 | 143,105 | 148,040 |

2009/2010 கல்வி ஆண்டிற்காக பல்கலைக்கழகத்திற்குத் தகைமை பெற்ற மாணவர்களில் 17% மாத்திரம் பல்கலைக்கழகத்திற்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன் ஒரு மாணவனுக்கான சராசரி மீண்டும் செலவு 148,040 ஆக இருந்தது.

### 2.2.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பயன்பாட்டிற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள முறையே ரூபா 450 மில்லியன் மற்றும் ரூபா 51.3 ஆக மீள்மதிப்பீடு செய்யப்பட்ட காணிகள் மற்றும் கட்டிடங்களின் சட்ட ரீதியான உரிமையை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) (i) 2008 செப்தெம்பர் 01 ஆந் திகதிய 763 ஆம் இலக்க ஆணைக்குழு சுற்று நிருபத்தின் பிரகாரம் கிழக்கு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ மற்றும் வணிக கற்கை நெறியினை புத்தள கம்உதாவ வளவிற்கு எடுத்துச் செல்வதற்காக பட்டப்படிப்பினை தொடர்பவர்களின் கல்வியின் தொடர்புத்தன்மை மற்றும் தரத்தினை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் அவ்வளவிலுள்ள கட்டிடங்களை மேம்படுத்துதல் மற்றும் திருத்தம் செய்வதற்காக ரூபா 60 மில்லியன் செலவு செய்திருந்ததுடன் பின்னர் அத்தீர்மானம் மாற்றப்பட்டு அவ்வளவு பதவியணியினர் பயிற்சி நிலையமாகப் பயன்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன். இவ்வளவிலுள்ள வளங்களைக் கவனத்தில் எடுத்துக்கொள்ளும் போது அதனை கவனத்தில் எடுத்துக்கொள்ளும் போது அதனை பயிற்சி நிலையமாகப் பயன்படுத்துதல் குறைந்த பயன்பாடாக இருக்கும் என்பது அவதானிக்கப்பட்டது.

(ii) பதவியணியினர் பயிற்சி நிலையமாகப் பயன்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்ட திகதியான 2009 ஒக்டோபர் 22 இலிருந்துத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 2010 திசெம்பர் 31 ஆந் திகதிவரையான ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலத்தின் போது அது பயிற்சி நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்தப்படவில்லை என்பது மேலும் வெளிப்படுத்தப்பட்டது.

(ஆ) ஐஆர்கியூயூஈ செயற்திட்டத்தினால் புத்தள பீடத்திற்காக ரூபா 4,710,353 செலவு செய்து 50 கணனிகள் 2010 மே 26 ஆந் திகதி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவற்றில் 02 கணனிகள் அலுவலகத்தின் பயன்பாட்டிற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் மிகுதி 48 கணனிகள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டன.

(இ) 2002 ஆம் ஆண்டின் போது ''சீடா - சரெக்'' செயற்திட்டத்தினால் வழங்கப்பட்ட ரூபா 139 மில்லியன் தொகையான மானியத்தில் மிகுதி ரூபா 2,226,257 தொகை மீளாய்வாண்டின் இறுதியில் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பயிலுனர் விரிவுரையாளர்களுக்கு பட்டப்பின் படிப்பினைத் தொடர்வதற்கு ஆராய்ச்சி மானியங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் 2010 ஆம் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட ஏற்பாடு ரூபா 10,350,000 ஆக இருந்த போதிலும் 80% ஆன ரூபா 8,273,900 மாத்திரம் ஆண்டின் இறுதியில் செலவு செய்யப்பட்டிருந்தது.

(உ) சுனாமி அனர்த்தத்தினால் பெற்றோர்களை/ பாதுகாவலர்களை இழந்து பல்கலைக்கழக மாணவர்களுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆரம்பிக்கப்பட்ட சுனாமிபுலமைப்பரிசில் நிதியமானது அரசாங்க மற்றும் தனியார் பங்களிப்புத் தொகையான ரூபா 7,902,765 இனை உள்ளடக்கியிருந்தது. 2010 ஆம் ஆண்டின் இறுதிவரை 71 சுனாமி புலமைப்பரிசில்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் நிதியத்தில் ரூபா 4,421,338 தொகையான மீதி ஒன்று அவதானிக்கப்பட்டது. அப்புலமைப்பரிசில் வழங்குவதின் செயற்பாட்டுச் சதவீதம் 44% ஆக இருந்தது.

(ஊ) தனிப்பட்ட புலமைப்பரிசில் நிதியத்தில் 86 கணக்குகள் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அக்கணக்குகளில் ரூபா 16,092,577 தொகையான மீதி ஒன்று காணப்பட்டது. இந்த நிதியத்திலிருந்து 16 கணக்குகள் செயற்படும் நிலையில் காணப்படுவதுடன் 2010 ஆம் ஆண்டின் போது இதில் ரூபா 1,613,810 பெறுமதியான 51 புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டிருந்தன. மிகுதி பா 7,058,205 (70 கணக்குகள்) தொகைக்குரிய அனைத்து நிதியங்களும் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டன. பல ஆண்டுகள் பழைமைவாய்ந்த இந்த நிதியத்தின் பயன்பாடு சம்பந்தமாக உரிய தரப்பினருடன் கலந்துரையாடி இணக்கப்பட்டிற்குவருவதற்கு அல்லது தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் அவதானத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) கூட்டிணைந்த திட்டம்

(இ) படிகள் கொடுப்பனவு